துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் நலஉதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர், நவ.8-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், 06-11-2025, வியாழக் கிழமை, மாலை 6 மணியளவில், காட்டுமன்னார்கோயில், எம்.ஆர்.கே கலையரங்கத்தில் நடைபெற்றது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நவம்பர் 27-ம் தேதி பிறந்த நாள் காணும் தமிழ்நாடு துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில், மாநகரம்,ஒன்றியம்,

நகரம்,பேரூர் மற்றும் கிளை கழங்கள்தோறும் கழக கொடியேற்றியும், இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும், பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கியும், விளையாட்டு போட்டிகள் நடத்தியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை கண்டித்து, திமுக கூட்டணி கட்சிகள் சார்பில், கடலூர் மஞ்சக்குப்பம் தபால் நிலையம் அருகில் வருகின்ற 11-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைப்பெற உள்ளது. இதில் கடலூர் கிழக்கு மாவட்ட கழகத்தை சார்ந்த அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டும். கடலூர் கிழக்கு மாவட்ட கழகத்தில் நடைப்பெற்று வரும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை அனைத்து கழக நிர்வாகிகளும் தீவிர களப் பணியாற்றி சிறப்பாக செய்திட வேண்டும்.

வருகின்ற 8 மற்றும் 9-ம் தேதி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைப் பெற உள்ள 75 வது அறிவுத் திருவிழாவில், கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் இளைஞரணி மாவட்ட,மாநகர, ஒன்றிய,நகர,பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பெருந்திரளாக கலந்துக்கொள்ள வேண்டும்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், ஒன்றிய கழக செயலாளர்கள்: காட்டு மன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, காட்டுமன்னார்கோவில் த.ஜெயபாண்டியன், குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, ,திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கே.கோவிந்தராஜ், திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார்,

கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம், புவனகிரி கிழக்கு ஏ.எஸ்.மதியழகன், புவனகிரி மேற்கு ஏ.எம்.மதியழகன், புவனகிரி மத்திய மு.வெற்றிவேலு , கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, கீரப்பாளையம் மத்திய வி.பி.பாலு, கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், பரங்கிப்பேட்டை வடக்கு முத்துபெருமாள், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், பரங்கிப்பேட்டை மத்திய எம்.மனோகரன், குமராட்சி மத்திய வி.ஆர்.ராஜேந்திர குமார், குமராட்சி மேற்கு என்.கே.நடராஜன், குமராட்சி தெற்கு ம.சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி,கடலூர் மத்திய கே.மகேஷ்,கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ஆசிரியர் பி.வெங்கடாஜலபதி,ஆசிரியர் சின்னமணி, தருமர் பழனிசாமி, தமிழரசன்,

கடலூர் பகுதி செயலாளர்கள்: பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர்கள் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: வ.ஞானசேகரன், கிள்ளை எஸ்.ரவிச்சந்திரன்,வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், இரா.தமிழரசன் ச.கல்யாணசுந்தரம், பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், அண்ணாமலை நகர் க.பழனி, சேத்திய தோப்பு ப.மனோகரன், லால்பேட்டை ஜெ.எம்.அன்வர்சதாத், பரங்கிப்பேட்டை தேன்மொழி சங்கர், மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞர் அணி ஜி.கார்த்திகேயன், மாணவரணி அமைப்பாளர் அப்பு ஆர்.சந்தியநாராயணன், விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் அ.முத்தமிழ்செல்வன், வி.எம்.வெற்றிசெல்வன், ப.பிரவின்குமார்,சண்முகம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தமிழ் உள்ளிட்ட மாவட்ட, மாநகர,கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

---

திண்டிவனம் நகரம் – ஒலக்கூர் கிழக்கு ஒன்றியம் சார்பில்

## வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திண்டிவனம், நவ.8-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி திண்டிவனம் நகரம் மற்றும் ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் வாக்குச்சாவடிமுகவர்கள், பூத் டிஜிடல் ஏஜன்ட் நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் திண்டிவனத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நகர அவைத் தலைவர் ரவிச்சந்திரன், ஒன்றிய அவைத் தலைவர் புருஷோத்தமன், ஆகியோர் தலைமையில்

திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், ஒலக்கூர் ஒன்றிய குழு தலைவர் சொக்கலிங்கம் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றகூட்டத்தில்

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் கடந்த நவம்பர் 4 முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை செயல்படுத்த உத்தரவிட்டுள்ளது.

என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி முன்னெடுப்புடன் வாக்குச்சாவடி முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகள் கவனமுடன் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் நீக்குதல் பணியை மேற்கொள்ள வேண்டும்.

பீகார் மக்கள் தமிழ்நாட்டில் அவமதிக்கப்படுகிறார்கள் என பீகார் தேர்தல் பிரச்சாரத்தில் தவறாக தெரிவித்துள்ளபிரதமர் மோடிக்கு

தமிழ்நாட்டில் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில்தான் பீகார் உள்ளிட்ட பிற மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் நிம்மதியாக வாழ்ந்துவருவதாகம்,

எதிர்வரும் நவம்பர் 27 அன்று பிறந்தநாள் விழா காணும் துணை முதலமைச்சரின்பிறந்தநாளை இளைஞர்களின் எழுச்சி நாளாக கொண்டாட வேண்டும்,ஏழை மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிட வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், செயற்குழு உறுப்பினர் சீனிராஜ் ,பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், முன்னாள் நகர செயலாளர் கபிலன், உள்ளிட்டபாக முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகள் உள்ளிட்ட தி.மு.க.நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

## மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு, தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட, மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - செ.சண்முகசுந்தரம், 19, வடக்கு வீதி, காந்திபுரம், நம்பியூர்.

துணைத் தலைவர் - பி.கே.காளியப்பன், சீதாலட்சுமி, கோபி.

அமைப்பாளர் - கே.எஸ்.சங்கர்சிவகுமார், சங்கரன் தோட்டம், கா.கணபதிபாளையம், அளுக்குளி, கோபி.

துணை அமைப்பாளர்கள் – 1) ப.பூபாலன், கே.ஜி.திருமண மண்டபம், புளியம்பட்டி, சத்தி. 2) எஸ்.ரமேஷ்செல்வன், குருமந்தூர் மேடு, நம்பியூர். 3) எம்.சதாசிவம், 26-பி, பிள்ளையார் கோவில் தெரு, சத்தி.

4) கு.ப.முருகசாமி, 188/21 புளியம்பட்டி ரோடு, நம்பியூர். 5) என்.டி.மகேந்திரன், 21/1, காந்திபுரம், ல.கள்ளிப்பட்டி, கோபி. 6) என்.காமராஜ், 166/7, கருப்பணன் வீதி, பதிபாளையம், சிறுவலூர், கோபி.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

#### சிவகாசி மாநகரம்

தலைவர் - ஆர். செல்வம் 467, முத்து மாரியம்மன் காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணைத் தலைவர் – க. அரவிந்த் 1479, பி.கே.என். ரோடு, சோலை காலனி, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம்.

அமைப்பாளர் – இரா. அழகு முத்துமாரியம்மன் காலனி, பள்ளபட்டி ரோடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) பெ. பாரதி 32, மேலரத வீதி, சிவகாசி - 626123, விருதுநகர் மாவட்டம். 2) ஜோ. ஆசிர்வாதம் 486, பாரதி நகர் 4வது தெரு, சிவகாசி கிழக்கு – 626189, விருதுநகர் மாவட்டம். 3) பி. சுப்பிரமணியன் 147ஏ, அம்மன் கோவில்பட்டி நடுத் தெரு, சிவகாசி கிழக்கு – 626189, விருதுநகர் மாவட்டம். 4) இரா. பாலாஜி சி–69, ஆலாவூரணி, அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம். 5) எம். செல்வம் 108, ஆலாவூரணி, அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

### திருப்பூர் மத்திய மாவட்டம்

#### திருப்பூர் தெற்கு மாநகரம்

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக பணியாற்றி வந்த ரஜினி செந்தில் அவர்கள் திருப்பூர் மத்திய மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால் அவருக்கு பதிலாக **க. சுரேஷ்** (3, தென்னம்பாளையம் கிழக்கு, வெள்ளியங்காடு 2வது வீதி, திருப்பூர் - 641604) அவர்கள் திருப்பூர் தெற்கு மாநகர கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 06-11-2025.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

---



தலைவாசல் தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ. செ.குணசேகரன்–திருமதி தங்கம் ஆகியோரின் இல்லத் திருமண விழாவினையொட்டி அமைச்சர் கோவி.செழியன் நேரில் வீட்டிற்குச் சென்று மணமக்கள் டாக்டர் சூர்யா மற்றும் டாக்டர் ஓம்பிரகாஷ் ஆகியோரை வாழ்த்தினார். இதில் ஜெயபாலன், பாஸ்கரன், சின்னப்பையன், சங்கரைய்யா, தேவேந்திரன், திருமுருகவேள், மாயக்கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசியல் கட்சிகளின் பேச்சுரிமை உள்பட

# அடிப்படை உரிமைகள் மீறப்படாமல் இருக்க வேண்டும்!

## பிரச்சாரம் செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது குறித்து அனைத்துக்கட்சிக் கூட்டத்துக்குப் பின் – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, நவ.8-

கரூரில் கடந்த செப்டம்பர் 27-ஆம் தேதி தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். ஏராள மானோர் காயம் அடைந்தனர்.

இனி இதுபோன்ற சம்பவம் நடைபெறாமல் இருக்க அரசியல் கட்சி பொதுக் கூட்டங்கள் பிரச்சாரங்களுள், ரோடு ஷோ நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தும் போது அசம்பாவிதங்கள் நிகழாமல் இருக்க அனைவருக்கும் அனுமதி வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து சமர்ப்பிக்க வேண்டும் என அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சில நாட்களுக்கு முன்பு வழிகாட்டுதல்களை உருவாக்க ஆலோசனை நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து நேற்றுமுன் தினம் சென்னை தலைமை செயலகத்தில் அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது. தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் பிரதிநிதிகளுடன் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



இதில் அரசு சார்பில் மூத்த அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, மா. சுப்பிரமணியன் மற்றும் தலைமை செயலாளர் முருகானந்தம், உள்துறை செயலாளர், டி.ஜி.பி. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. கூட்டணி சார்பில் ஆர்.எஸ். பாரதி, என்.ஆர்.இளங்கோ எம்.பி. உள்பட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள், தலைவர்கள் பங்கேற்று கருத்துகளை தெரிவித்தனர்.

பிரச்சார கூட்டங்களுக்கான விதிகள் அனைத்து கட்சிகளுக்கும் ஒரேமாதிரி இருக்க வேண்டும் என்று பலர் வலியுறுத்தினார்கள்.

**கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!**

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி நிருபர்களிடம் கூறியதா வது:-

அரசியலமைப்பு சட்டபடி நிபந்தனைகளை வகுக்கலாம் என்று கூறி உள்ளோம். அரசியல் கட்சியின் அடிப்படை உரிமையான பேச்சுரிமை, எழுத்துரிமை பாதுகாக்கப்படும் வகையில் நிபந்தனை களை வகுக்க வேண்டும். அதன் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவுக்கு ஏற்ப தி.மு.க. நடந்து கொள்ளும்.

**அடிப்படை உரிமைகளை மீறக் கூடாது!**

எந்த நிபந்தனைகள் விதித்தாலும், அடிப்படை உரிமை கள் மீறப்படாமல் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அந்த வகையில் அரசு போடுகின்ற உத்தரவுகள், நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகள் அடிப்படை உரிமைகளை மீறாமல் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தி.மு.க. தனது கருத்தை பதிவு செய்தது. அடிப்படை உரிமை பொருள் 19/1பி மீறாத வகையில் எந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டாலும் தி.மு.க.அதை ஏற்றுக்கொள்ளும். இன்று எடுக்கப்படும் முடிவு, நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டியளித்தார்.


